




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 238 20.2.2026 FRIDAY MAASI : 8 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 238 20.2.2026 வெள்ளிக்கிழமை மாசி : 8 விலை : ரூ.5/–


# “திமுகவுடன் இணைந்தது தேமுதிக”

## அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு...

சென்னை: பிப்.20-

நீண்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் திமுகவுடன் தேர்தல் கூட்டணியை அமைத்துள்ளது. “தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேற இணைந்து பயணிப்போம்” என திமுக கூட்டணியில் இணைந்துள்ள தேமுதிகவை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்றுள்ளார்.

2026ல் நடைபெறவிருக்கும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தேமுதிக யாரும் எதிர்பாராத நகர்வாக திமுக கூட்டணியில் இணைந்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில், “தலைவர் கலைஞர் மேல் மாறாத அன்பு கொண்டவரும், எனது அன்பு நண்பருமான ‘கேப்டன்’ விஜயகாந்த் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிட கழகம், இன்று மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.



சகோதரர் கேப்டன் உருவாக்கிய இயக்கத்தைத் தற்போது திறமையாக வழிநடத்தி வரும் பொதுச்செயலாளர் அன்புச் சகோதரி பிரேமலதா விஜயகாந்தையும், அக்கட்சியின் நிர்வாகிகளையும் வருக வருக என வரவேற்கிறேன்.

கருப்பு சிவப்பைக் கொடியில் தாங்கியிருக்கும் தங்களது நல்வரவு நல்லுறவு தொடர்ந்து தமிழ்நாட்டின் உயர்வுக்குப் பங்களிக்கட்டும். திராவிட மாடல் ஆட்சி தொடரவும், தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறவும் இணைந்து பயணிப்போம். வெல்வோம் ஒன்றாக” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தேமுதிக. திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலினுடன் கூட்டணி அமைத்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த பிரேமலதா விஜயகாந்த், தான் ஏற்கெனவே சொன்னபடி தேமுதிக தொண்டர்கள், நிர்வாகிகள் விருப்பப்படி திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளதாகக் கூறினார்.

தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறியதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேமுதிக யாருடன் கூட்டணி என்ற கேள்வி நீண்ட நாட்களாக நிலவிவந்தது. அதன்படி, இன்று திமுகவுடன் தேமுதிக கூட்டணியை உறுதி செய்துள்ளோம்.

தேமுதிக நிர்வாகிகள், தொண்டர்கள் விரும்பியபடிய திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். தேமுதிக முதன்முறையாக திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளது. 2016லேயே இந்தக் கூட்டணி அமைந்திருக்க வேண்டும். பழம் நழுவி பாலில் விழும் என்று கருணாநிதி கூறியிருந்தார். ஆனால், அது இப்போது கேப்டன் இல்லாதபோது தாமதமாக நடந்துள்ளது.

மற்றபடி இந்தத் தேர்தலில் தேமுதிக எத்தனை தொகுதிகளில் போட்டியிடும், எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடும் போன்றவை எல்லாம் அண்ணன் ஸ்டாலின் அறிவிப்பார். இதற்காக ஒரு குழு அமைக்கப்படும். அந்தக் குழு திமுகவுடன் ஆலோசனை செய்தபின்னர் முறைப்படி அறிவிப்பு வெளியாகும்.

இந்தக் கூட்டணி தேமுதிகவினர், பொது மக்களும் வரவேற்கும் கூட்டணியாக உள்ளது. 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவது உறுதி. ராஜ்யசபா எம்.பி. சீட் குறித்து எல்லாம் அண்ணன் ஸ்டாலின் உரிய நேரத்தில் அறிவிப்பார். இவ்வாறு பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

## “மகாராஷ்டிராவில் முஸ்லிம் இடஒதுக்கீடு ரத்து... தமிழகத்தில் வெறுப்பு எஞ்சின் ஓடாது” : மு.க.ஸ்டாலின்

சென்னை: பிப்.20-

‘மகாராஷ்டிராவில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீட்டை நீக்கிய பாஜக, இந்தியா முழுவதும் இதையே செய்யத் துடிக்கிறது’ என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மகாராஷ்டிராவில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீட்டை நீக்கிய பா.ஜ.க. இதைத்தான் இந்தியா முழுவதும் செய்யத் துடிக்கிறார்கள். அண்மையில் மறைந்த மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் 2014இல் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு 5% இடஒதுக்கீடு அளிக்கும் முடிவை எடுத்தார்.



அவர் மறைந்த துயரம் அனைவரின் மனதில் இருந்தும் அகல்வதற்குள் அவர் எடுத்த முடிவை நீக்கியுள்ளது சிறுபான்மையினர் வெறுப்பில் ஊறிப்போன பா.ஜ.க. இதுதான் இஸ்லாமிய மக்களுக்கு #AntiMinorityBJP அறிவித்திருக்கும் ரம்ஜான் பரிசா?

தப்பித் தவறிக் கூட தமிழ்நாட்டுக்குள் என்டிஏ வரவே கூடாதென ஏன் சொல்கிறேன் புரிகிறதா? வந்தால் நம் அனைவரின் இடஒதுக்கீடும் காலி. இவர்களுக்கு ஒருநாளும் வளர்ச்சி அரசியல் தெரியாது; தெரிந்ததெல்லாம் மதவெறி சூழ்ச்சி அரசியல் மட்டும்தான். இத்தகைய வெறுப்பு எஞ்சின்கள் தமிழ்நாட்டில் ஓட அனுமதிக்க மாட்டோம். "தமிழ்நாடா என்டிஏவா?" எனும் 2026 ஜனநாயகப் போரில் தமிழ்நாடே வெல்லும்’ எனத் தெரிவித்துள்ளார்.

## “அதிமுக சாதனை திட்டங்கள் மீது சவாரி செய்யும் திமுக தோல்வி அடைய வாழ்த்துகள்” : இபிஎஸ்

சென்னை: பிப்.20-

முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆட்சியில் சாதனைகள் என்று எதுவும் இல்லை என குற்றம் சாட்டியுள்ள எடப்பாடி பழனிசாமி, தோல்வி அடைய வாழ்த்துகள் என்று கிண்டலித்துள்ளார்.

இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ‘‘என்ன தான் ஆச்சு இந்த பொம்மை முதல்வருக்கு? ஆட்சிக்கு வந்து எந்தவொரு உருப்படியான திட்டத்தையும் நிறைவேற்றவில்லை, திறந்ததெல்லாம் அதிமுக திட்டங்கள் மீதான ஸ்டிக்கர்கள் மட்டுமே!

இது போதாது என்று, தேர்தல் நெருங்குவதும் ஸ்டிக்கர் பித்து அதிகரித்ததோ என்னவோ, அஇஅதிமுகவின் வரலாற்றுச் சாதனைகள் மீது ஏறி சவாரி செய்ய ஆசைப்படுகிறார் மு.க. ஸ்டாலின்.

ஏற்கனவே 7.5% திட்டம் குறித்து ஒரு வரலாற்றுப் பொய்யை நாக் கூசாமல் மருத்துவத்துறை அமைச்சர் வாயிலாக பேசியதை, நேற்று சட்டமன்றத்திலேயே தோலுரித்தேன்.

நேற்று மாலை, தனது தொடர், ‘‘ஆடியோ லாஞ்ச் மேடை அரசியலின்’’ அங்கமாக விளையாட்டு துறை சார்ந்த விழா ஒன்றில் மேடையேறிய பொம்மை முதல்வர், ‘‘விளையாட்டு வீரர்களுக்கான 3% இட ஒதுக்கீடு’’ திட்டத்தின் பலன்கள் மீது தனது பெயரை எழுதிக் கொள்ள முனைந்தது வேடிக்கையாக இருந்தது.

விளையாட்டு வீரர்களுக்கான அரசுப்பணிகளில் இட ஒதுக்கீடு என்பது, 2018ல் எனது தலைமையிலான அதிமுக அரசு 2%ஆக அறிவித்தது. இதற்கு நன்றி தெரிவித்து விளையாட்டு வீரர்கள் அளித்த விழாவில், இந்த இட ஒதுக்கீட்டை 3% ஆக உயர்த்தி நான் அறிவித்தேன்.

அதன் பிறகு, 2020ல் கொரோனா பெருந்தொற்றுக் காலம், 2021ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது.

இதில் ஸ்டாலின் செய்தது என என்ன இருக்கிறது? பணி ஆணைகள் கொடுப்பது போல் போட்டோ எடுத்துக் கொண்டது மட்டுமே இந்த பொம்மை முதல்வரின் ஒரே பங்களிப்பு.

7.5% மருத்துவ உள் இடஒதுக்கீடு ஆகட்டும், 3% விளையாட்டு வீரர்களுக்கான ஆகட்டும் நான் அரசுப்பள்ளியில் படித்தவன், விளையாட்டு வீரர்களின் உணர்வுகளைப் புரிந்தவன் என்ற முறையில், அவர்களுக்காக பார்த்துப் பார்த்துச் செய்த சாதனைத் திட்டங்கள். இதெல்லாம் ஸ்டாலின் போன்றோருக்கு எப்படி புரியும்? இப்படி ஏதாவது ஒரு புதிய சாதனைத் திட்டத்தை ஸ்டாலின் கொடுத்தாரா? இல்லை!

அதனால், இப்படி வெட்கமின்றி எங்கள் திட்டத்தின் மீது சவாரி செய்யும் எண்ணத்தை எல்லாம் கைவிட்டு, உங்கள் ஆட்சியின் சாதனைகளைக் கூறிப் பிரச்சாரம் செய்யப் பாருங்கள் மு.க.ஸ்டாலின். (ஓஹ்ஹ்.. அப்படி எதுவுமே இல்லையோ..??!! சரி, தோல்வி அடைய வாழ்த்துகள்!)’’ என தெரிவித்துள்ளார்.



■ சேலம் மாவட்டம், கருப்பூர் பேரூராட்சி, வார்டு எண் 3ல் செயல்பாடு மற்றும் பராமரிப்பு நிதிதிட்டத்தின் கீழ் ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வாரச் சந்தையினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## அதிமுக+ Vs தவெக: திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது யாருக்கு அதிக பாதிப்பு?

சென்னை, பிப்.20-

ஒருவழியாக 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்துவிட்டது தேமுதிக. பிரேமலதா எடுத்த இந்த அதிரடி முடிவால், அதிமுக கூட்டணிக்கு ஏற்படப்போகும் இழப்புகள் என்ன? தவெகவின் மனநிலை என்ன?



2005ல் திமுக, அதிமுக கட்சிகளுக்கு மாற்றாக தேமுதிக தொடங்கப்பட்டது. விஜயகாந்த் கட்சி தொடங்க முக்கிய காரணம் திமுக கொடுத்த நெருக்கடிகள்தான் என்று பேசப்பட்டது. 2006ல் தனித்துப் போட்டியிட்ட தேமுதிகவில் விஜயகாந்த் மட்டும் ஒரே ஆளாக வென்றார். தொடர்ந்து அதிமுக மீதான விமர்சனங்களை குறைத்துக்கொண்டு, திமுகவை போட்டுத் தாக்க ஆரம்பித்தார் விஜயகாந்த். பின்னர் 2011ல் அதிமுகவோடு கூட்டணி வைத்து சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராகவும் ஆனார்.

அதன்பிறகு அதிமுகவோடும் மோதிய விஜயகாந்தின் தேமுதிக, படிப்படியாக கரைந்துப் போனது. 2016 தேர்தலில் ‘பழம் நழுவிப் பாலில் விழும்’ என தேமுதிக கூட்டணிக்காக காத்திருந்தார் கருணாநிதி. ஆனால், அந்தத் தேர்தலில் மக்கள் நலக் கூட்டணிக்கு தலைமை தாங்கி படுதோல்வியடைந்தது தேமுதிக.

பின்னர் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் அமமுகவுடன் கூட்டணி அமைத்து வெறும் 0.43 சதவீத வாக்குகளை மட்டுமே அக்கட்சி பெற்றது. 2011க்கு பின்னர் ஒரு தேர்தலில் கூட தேமுதிகவால் வெல்ல முடியவில்லை.

2024 மக்களவைத் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணிவைத்த தேமுதிக, ராஜ்ய சபா சீட் கிடைக்காத விரக்தியில் அந்தக் கூட்டணியை விட்டு விலகியே நின்றது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்காக, திமுக, என்டிஏ என இரு தரப்பிலும் தேமுதிக சார்பில் பேச்சு நடத்திய நிலையில், தவெக ஆப்ஷனும் அக்கட்சியிடம் இருந்தது. இந்தச் சூழலில்தான் தற்போது திமுக கூட்டணியை உறுதி செய்துள்ளது தேமுதிக.

திமுகவுக்கு கிடைக்கப் போகும் அனுகூலம்!

தேமுதிகவின் வருகை நிச்சயமாக திமுக கூட்டணிக்கு பலம்தான். ஏனென்றால், ஏற்கெனவே வலுவான கூட்டணி இருந்தாலும், ஆட்சிக்கு எதிரான மனநிலை மற்றும் தவெகவின் வருகையால் இழக்கப் போகும் வாக்குகளை ஈடு செய்ய புதிய கட்சிகள் தேவை என்று கணக்குப் போடுகிறது திமுக. இது மட்டுமின்றி கூட்டணிக்குள் தற்போது ஏற்பட்டுள்ள சலசலப்புகளை தீர்க்கவும் புதிய கட்சிகள் திமுகவுக்கு தேவைப்படுகிறது.

சமீப காலமாகவே காங்கிரஸ் கட்சி, தவெக எனும் சின்ன மீனைப் போட்டு திமுக எனும் பெரிய மீனை மிரட்டி வருகிறது. ‘அதிகம் தொகுதிகள், ஆட்சியில் பங்கு, ராஜ்ய சபா, வாரியத் தலைவர் பதவிகள் வேண்டும்’ எனக் கேட்டு தொடர்ச்சியாக குடைச்சல் கொடுத்து வருகிறார்கள். எவ்வளவு தூரம்தான் போவார்கள் என காங்கிரஸை ஆழம் பார்த்துக் கொண்டிருக்கிறது திமுக. அதனால்தான் சமீபத்தில் தமிழகம் வந்த காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபாலைகூட சந்திக்காமல் தவிர்த்தார் மு.க.ஸ்டாலின்.

தமிழகத்தில் ஆட்சியை பிடிக்க பாஜக செய்யும் வியூகங்களை உடைக்க புதிய கட்சிகள் தேவை. எனவே, உங்களுக்கு கூடுதல் தொகுதிகள் கொடுக்க முடியாது என்று தெளிவான மெசேஜை தேமுதிகவை கூட்டணிக்குள் கொண்டுவந்து காங்கிரஸுக்கு சொல்லிவிட்டார் ஸ்டாலின்.

காங்கிரஸ் மட்டுமல்ல விசிக, கம்யூனிஸ்டுகளும் இம்முறை கூடுதல் தொகுதிகள் கேட்டு நெருக்கி வந்தனர். இருப்பவர்களுக்கு கூடுதல் தொகுதிகள் கொடுப்பதை விட, புதிதாக ஒரு கட்சியை கூட்டணிக்குள் கொண்டு வந்து அவர்களுக்கு சில தொகுதிகளை கொடுக்கலாம் என்ற எண்ணத்தில்தான் முரசு கட்சிக்கு சூரியக் கட்சி பச்சைக் கொடி காட்டியுள்ளது.

ஒரு கல்லில் பல மாங்காய் என்பதுபோல தேமுதிகவை உள்ளே கொண்டுவந்து காங்கிரஸின் ‘கேட்கும் திறனை’ குறைத்துள்ளது திமுக. அதுபோலவே விசிக, கம்யூனிஸ்டுகள், மய்யம், மதிமுக உள்ளிட்ட இன்னும் சில கட்சிகளின் ‘கூடுதல் தொகுதிகள்’ கோரிக்கைக்கும் ‘முடிவுரை’ எழுதியுள்ளது.

இதன் மூலமாக கடந்த முறை பெற்ற தொகுதிகளையே இம்முறையும் கூட்டணிக் கட்சிகளுக்கு திமுக கொடுக்கும். புதிதாக வந்துள்ள மய்யத்துக்கு 3 முதல் 5 தொகுதிகளும், தேமுதிகவுக்கு 6 அல்லது 7 தொகுதிகளும் கொடுக்கப்படலாம். ராஜ்ய சபா சீட்டை பிரேமலதா உறுதி செய்துள்ளாரா என்பது விரைவில் தெரிய வரும்.

அதிமுகவுக்கு ஷாக்!

வெற்றிப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் உள்ள திமுக, எந்த எல்லைக்கும் சென்று வாய்ப்புள்ள கட்சிகளையெல்லாம் கூட்டணியில் சேர்த்து வருகிறது. ஆனால், ஏற்கெனவே கூட்டணியில் இருந்த கட்சிகளைக் கூட பழனிசாமியால் தக்கவைக்க முடியவில்லை. தொடக்கத்திலிருந்தே தேமுதிகவுக்கு ராஜ்ய சபா சீட் கொடுக்க பழனிசாமிக்கு மனது இல்லை.

மேலும், தேமுதிக தரப்பில் அதிமுகவிடம் இரட்டை இலக்க தொகுதிகள் மற்றும் ராஜ்ய சபா சீட் கேட்கப்பட்டது. ஆனால், அதற்கு கடைசிவரை பழனிசாமி பிடி கொடுக்கவே இல்லை.

10 சதவீதத்தில் இருந்து சுமார் 1 சதவீதம் அளவுக்கு தேமுதிகவின் வாக்கு வங்கி சரிந்துப் போயிருந்தாலும், தமிழகத்தில் 20 முதல் 30 தொகுதிகளில் தேமுதிகவுக்கு கணிசமான வாக்குகள் உள்ளன. அது நிச்சயமாக என்டிஏவுக்கு பலமாக மாறியிருக்கும். தேமுதிகவை கூட்டணிக்குள் கொண்டு வர பாஜக எடுத்த பலகட்ட முயற்சிகளும் பலனளிக்காமல் போனது.

திமுக தேமுதிக கூட்டணி, அதிமுகவுக்கு மட்டுமல்ல தவெகவுக்கும் நிச்சயம் ஷாக் தான். 234 தொகுதிகளுக்கும் ’பசையுள்ள’ வேட்பாளர்களை பிடிக்க திணறும் தவெக, கணிசமான தொகுதிகளை தள்ளிவிட கூட்டணிக் கட்சிகளை தேடி வருகிறது.

ஏற்கெனவே, தினகரன், அன்புமணி ஆகியோர் எஸ்கேப் ஆன நிலையில், எப்படியும் காங்கிரஸை கொண்டு வரலாம், கூடவே தேமுதிகவையும் கொண்டு வரலாம் என்று நினைத்தார் விஜய். ஆனால், விஜய்யின் ஆசையிலும் இடியை இறக்கிவிட்டது தேமுதிக. இனி காங்கிரஸும் கொடுப்பதை வாங்கிக் கொண்டு திமுகவில் இருக்கும் சூழலே உருவாகும்.

எனவே, தேமுதிகவின் இந்த முடிவால் தவெகவின் கூட்டணிக் கனவும் கிட்டத்திட்ட முடிந்துவிட்டது. அந்த விரக்தியில் தான் தேமுதிக திமுக கூட்டணியை ‘விஜயகாந்த் மன்னிக்க மாட்டார்’ என புலம்பியுள்ளார் தவெக நிர்வாகி நிர்மல்குமார்.

மொத்தத்தில் திமுக கூட்டணிக்கு பூஸ்ட் கொடுத்து, அதிமுக கூட்டணிக்கு ‘பை பை’ சொல்லிவிட்டு, கூடவே தவெகவின் கனவுக்கும் ‘எண்ட் கார்டு’ போட்டு இந்த நேரத்தில் கேம் சேஞ்சராக மாறியுள்ளார் பிரேமலதா.

# மதிமுக தனிச் சின்னத்தில்தான் போட்டியிடும்: வைகோ திட்டவட்டம்



சென்னை, பிப்.20-

“மதிமுக தனிச் சின்னத்தில்தான் போட்டியிடும். திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது மகிழ்ச்சி. தேமுதிக சேர்ந்ததும் திமுக கூட்டணி மேலும் வலுப்பெற்று இருக்கிறது,” என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “பிரதமர் மோடி 3 முறையல்ல, 33 முறை தமிழகத்துக்கு வந்தாலும் பாஜவை இங்கு கால் பதிக்க வைக்க முடியாது. மதிமுக தனிச் சின்னத்தில் தான் போட்டியிடும். இண்டியா கூட்டணிக்கு முதல்வர் ஸ்டாலின் தான் தலைமை ஏற்க வேண்டுமென மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து குரல்கள் வருவது திமுகவுக்கு பெருமை. கூட்டணியில் இருப்பவர்களும் பெருமைப்படுகிறோம்.

திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது மகிழ்ச்சி. தேமுதிக சேர்ந்ததும் திமுக கூட்டணி மேலும் வலுப்பெற்று இருக்கிறது. எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் கலகலத்து கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் ஒரே நேரத்தில் ஒன்பது குரல் கொடுப்பார்கள். அவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது” என்றார்.

மேலும் தவெக தலைவர் விஜய் குறித்த கேள்விக்கு, “திரைப்படங்களைப் பார்த்து சில இளைஞர்களுக்கு விருப்பம் வந்திருக்கிறது. அதை பார்த்து அவர்கள் செல்கிறார்கள். ஆனால் அது தேர்தல் முடிவுகளில் வெற்றியை, தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தாது” என்றார்.

# கவனித்துக்கொள்ள யாரும் இல்லாததால் மனைவியை கொன்ற முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி கைது



பெங்களூரு, பிப்.20-

பெங்களூருவில் மனைவியை கழுத்தை நெரித்து கொலை செய்த ஓய்வு பெற்ற இஸ்ரோ விஞ்ஞானி நாகேஷ்வர் ராவ் கைது செய்யப்பட்டுள்ளார். தனக்கு பிறகு மனைவியை கவனித்துக்கொள்ள யாரும் இல்லாததால் கொலை செய்ததாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பெங்களூருவில் உள்ள பொம்மனஹள்ளியில் ஓய்வு பெற்ற இஸ்ரோ விஞ்ஞானி நாகேஷ்வர் ராவ் (72) தனது மனைவி சந்தியா (65) உடன் வசித்து வந்தார். ஆந்திர மாநிலம் விஜயவாடாவை சேர்ந்த இவர்களின் மகள் அமெரிக்காவில் வசித்து வருகிறார். நாகேஷ்வர் ராவ் இஸ்ரோ நிறுவனத்தில் பல்வேறு செயற்கைக்கோள் தயாரிப்பு பணிகளில் துணை திட்ட இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில் நேற்று காலை 11 மணியளவில் நாகேஷ்வர் ராவுக்கும் அவரது மனைவி சந்தியாவை கழுத்தை நெரித்து கொலை செய்ததாக தெரிகிறது. பின்னர் தனது மகளை தொடர்புக் கொண்டு, நடந்த சம்பவத்தை கூறியுள்ளார். உடனடியாக அவர், மருத்துவர் ஒருவரை வீட்டுக்கு அனுப்பியுள்ளார்.

படுக்கை அறையில் பேச்சு மூச்சின்றி கிடந்த சந்தியாவின் உடலை பரிசோதித்த மருத்துவர், அவர் உயிரிழந்ததை உறுதி செய்தார். அதேவேளையில் கழுத்தை நெரித்ததற்கான ரத்த காயங்கள் இருப்பதை அறிந்து மருத்துவர், போலீஸாருக்கு தகவல் கொடுத்தார்.

சம்பவ இடத்துக்கு சென்ற ஆவலஹள்ளி போலீஸார், நாகேஷ்வர் ராவிடம் விசாரணை மேற்கொண்டனர். அப்போது அவர், தனது மனைவி சந்தியாவை கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து உடலை கைப்பற்றிய போலீஸார், பிரேத பரிசோதனைக்காக விக்டோரியா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நாகேஷ்வர் ராவ் மீது கொலை வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்தனர். இதுகுறித்து போலீஸார் கூறுகையில், ''நாகேஷ்வர் ராவ் மன அழுத்தம் தொடர்பான மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார். அவரது மகள் வெளிநாட்டிலே தங்கிவிட்டதால் விரக்தியில் இருந்துள்ளார்.

மேலும் தனது மரணத்துக்கு பிறகு தன் மனைவியை கவனித்து கொள்ள யாரும் இல்லாததால் கொலை செய்ததாக கூறியுள்ளார். தன் மனைவியை கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ள திட்டமிட்டிருந்ததாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்''என்றனர்.

# ஸ்டாலின் வெளியேறினால் இண்டியா கூட்டணி வெறும் எழுத்தில் தான் இருக்கும்” சீமான் சொல்கிறார்



திருச்சி, பிப்.20-

இண்டியா கூட்டணியில் வலுவாக இருப்பது முதல்வர் மு.க.ஸ்டாலின் தான். அவர் வெளியேறி விட்டால் இண்டியா கூட்டணி என்பது வெறும் எழுத்தில் தான் இருக்கும் என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

திருச்சியை அடுத்த ஆலம்பட்டி புதூரில் நாம் தமிழர் கட்சி சார்பில் வரும் 21ம் தேதி மாநாடு நடைபெறுகிறது. அதற்காக அங்கு நடைபெறும் ஏற்பாடுகளை கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாங்கள் தேர்தல் அறிக்கை வெளியிட மாட்டோம். எங்கள் ஆட்சி எப்படி இருக்கும் என்பதற்கான செயல்முறையைத் தான் வெளியிடுவோம். மாநாட்டில் 234 தொகுதி வேட்பாளர்களையும் அறிமுகம் செய்ய உள்ளேன். இந்தத் தேர்தலில் நானும் போட்டியிடுவேன். இடைக்கால பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட் ஆக உள்ளது. இந்த ஆட்சி முறையை நாங்கள் எதிர்க்கிறோம்.

தமிழகத்தின் வளர்ச்சி என்பது கடன் வளர்ச்சியாக உள்ளது. தமிழக அரசு வாங்கிய கடனுக்கு வட்டியாக ஒரு லட்சம் கோடிக்கு மேல் கட்டிக்கொண்டு இருக்கிறோம். இலவசங்கள் எனக் கூறிவிட்டு, மின் கட்டணம், சொத்து வரி போன்றவற்றை உயர்த்துகிறார்கள். தொடர்ச்சியாக கடன் வாங்கிக் கொண்டிருக்கும்போது நாடு பொருளாதார அடிமையாக மாறிவிடும்.

இண்டியா கூட்டணியில் ஏதோ பிரச்சினை இருப்பதால்தான், அவர்கள் நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் எனக் கூறிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கூட்டணியில் வலுவான தலைவராக இருப்பது ஸ்டாலின் தான். அவர் வெளியேறி விட்டால் இண்டியா கூட்டணி என்பது வெறும் எழுத்தில் தான் இருக்கும். அதனால் தான் மணிசங்கர் ஐயர் ஸ்டாலினை தலைமை தாங்க அழைக்கிறார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தவெக தலைவர் விஜய், மக்கள் சந்திப்பு பயணத்தை தற்போது நிர்வாகிகள் சந்திப்பு பயணம் என்று மாற்றி உள்ளதை எப்படிப் பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்கு, “தம்பியை (விஜய்) குறை சொல்வது என் வேலையில்லை. என்னுடைய வேலையை நான் செய்து கொண்டிருக்கிறேன். அதை நீங்கள் என் தம்பியிடம் தான் கேட்க வேண்டும்” என்றார்.

# “ஏஐ துறையில் இந்தியா பார்ப்பது அச்சத்தை அல்ல... எதிர்காலத்தையே!” பிரதமர் மோடி

புதுடெல்லி: பிப்.20-

புதுடெல்லியில் உள்ள பாரத மண்டபத்தில் இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சிமாநாடு 2026ல் பிரதமர் நரேந்திர மோடி முக்கிய உரையை நிகழ்த்தினார். அப்போது அவர் கூறியது: “மனித குலத்தில் ஆறில் ஒரு பங்கினரை கொண்டுள்ள நாடாகிய இந்தியாவில் உலகின் மிகப் பெரியதும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சிமாநாடு நடைபெறுகிறது. உலகின் மிகப்பெரிய இளையோர் மக்கள் தொகையைக் கொண்ட நாடாகவும், தொழில்நுட்ப தொகுப்பின் தாயகமாகவும் விளங்கும் இந்தியா, தொழில்நுட்பம் சார்ந்த சூழல் அமைப்புக்காக பாடுபடுகிறது.

இந்தியா புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவது மட்டுமின்றி, முன் எப்போதும் இல்லாத வேகத்துடன் அவற்றை ஏற்கவும் செய்கிறது. இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள உலகத் தலைவர்கள், உலகளாவிய ஏஐ சூழல் அமைப்பின் தலைவர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள் ஆகியோரை 140 கோடி இந்திய மக்களின் சார்பில் வரவேற்கிறேன். இந்தியாவில் இத்தகைய உச்சிமாநாடு நடைபெறுவது நாட்டுக்கு பெருமை சேர்ப்பது மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகளாவிய தெற்கு நாடுகளுக்கும் பெருமை சேர்க்கிறது.

உலகம் முழுவதிலும் இருந்து தலைசிறந்த நிபுணர்களின் பங்கேற்புடன் சுமார் 100 நாடுகளின் பிரதிநிதிகளும் வருகை தந்துள்ள இந்த உச்சி மாநாட்டின் வெற்றி, புதிய உச்சங்களைத் தொடும். இளைய தலைமுறையின் வலுவான பங்கேற்பு, புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இங்கு, வேளாண்மை, பாதுகாப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி ஆகிய துறைகளில் தீர்வுகள் காட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றன. செயற்கை நுண்ணறிவு துறையில் இந்தியாவின் புத்தாக்க திறன்களையும் இது வெளிப்படுத்துகிறது.

மனிதகுல வரலாற்றில் சில நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை திருப்பங்கள் ஏற்படும். அவை நாகரிகத்தில் புதிய திசைகளை ஏற்படுத்தும். கற்களில் இருந்து முதல்முறையாக தீப்பொறி உருவாக்கப்பட்டது. அந்த தீப்பொறி நாகரீகத்திற்கு அடித்தளமாக மாறும் என்று அப்போது எவரும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள். பேச்சுவழக்கில் இருந்த மொழி, எழுத்து வடிவத்துக்கு முதல்முறையாக மாறிய போது, எழுத்துப்பூர்வமான அறிவு, எதிர்கால அமைப்பு முறைகளுக்கு முதுகெலும்பாக மாறும் என்பதை எவரும் உணர்ந்திருக்க மாட்டார்கள். கம்பியில்லா சமிக்ஞை முறைகள் முதலில் உருவாக்கப்பட்ட போது, ஒரு நாளில் ஒட்டுமொத்த உலகமும் நிகழ்நேரத்தில் இணைக்கப்படும் என்பதை எவரும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள்.

அணுசக்தி கண்டறியப்பட்ட பின், அதன் அழிவு சக்தியையும், ஆக்கப்பூர்வமான பங்களிப்புகளையும் மனிதகுலம் கண்டது. இதேபோல், செயற்கை நுண்ணறிவும் மாற்றத்திற்கானது. சரியான திசையில் இது செல்லாவிட்டால், இடையூறுகளுக்கு வழிவகுக்கும்; சரியான திசையில் சென்றால் இது சிறந்த தீர்வாக இருக்கும். செயற்கை நுண்ணறிவில் இந்தியா அச்சத்தைப் பார்க்கவில்லை; மாறாக எதிர்காலத்தையே பார்க்கிறது. செயற்கை நுண்ணறிவு இயந்திரத்தை மையமாகக் கொண்டிருப்பதை விட, மனிதர்களை மையமாகக் கொண்டிருப்பது முக்கியம். இதற்கான கருத்துகளை உருவாக்குவதே உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சிமாநாட்டின் முக்கிய நோக்கம்.

அனைவருக்கும் நல்வாழ்வு, அனைவருக்கும் மகிழ்ச்சி என்ற உச்சிமாநாட்டின் மையப்பொருள் செயற்கை நுண்ணறிவு குறித்த இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையை தெளிவாக பிரதிபலிக்கிறது. செயற்கை நுண்ணறிவு ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். செயற்கை நுண்ணறிவு அனைவரையும் உள்ளடக்கியதாக அதிகாரம் அளிப்பதற்கான ஊடகமாக இருக்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு குறித்த இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையாக மானவ் (M.A.N.A.V.) என்பதை இந்தியா முன்வைக்கிறது. இதில் M என்பது நீதி மற்றும் நெறிமுறைகளைக் குறிக்கும் (Moral and Ethical Systems). A என்பது கடமைப் பொறுப்புள்ள நிர்வாகத்தைக் குறிக்கும் (Accountable Governance). N என்பது தேசத்தின் இறையாண்மையைக் குறிக்கும் (National Sovereignty). A என்பது எளிதில் அணுகக் கூடியதையும், அனைவரையும் உள்ளடக்கியத்தையும் குறிக்கும் (Accessible and Inclusive). V என்பது சரிபார்க்கக் கூடியது மற்றும் சட்டப்பூர்வமானது (Valid and Legitimate) என்பதைக் குறிக்கும். இந்தியாவின் மானவ் என்ற தொலைநோக்குப் பார்வை 21ம் நூற்றாண்டில் செயற்கை நுண்ணறிவால் செயல்படும் உலகில் மனிதகுலத்தின் நல்வாழ்வுக்கான முக்கிய இணைப்பாக மாறும்.

சில பத்தாண்டுகளுக்கு முன் இணையதளம் தொடங்கிய போது, எவ்வளவு வேலைவாய்ப்புகளை அது உருவாக்கும் என்று யாரும் கற்பனை செய்திருக்க முடியாது. அதே உண்மை இன்று செயற்கை நுண்ணறிவுக்கும் பொருந்தும். எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு மூலம் என்ன வகையான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்பதை இப்போதே முன் உணர்ந்து கூறுவது சிரமமாகும். இருப்பினும், எதிர்காலத்தில் மனிதர்களும், நுண்ணறிவு கருவிகளும் இணைந்து பணியாற்றும் நிலை ஏற்படும். செயற்கை நுண்ணறிவு அதிக புத்திசாலித்தனமாகவும், அதிக திறனோடும், அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்” என்று பிரதமர் மோடி உரையாற்றினார்.

# எப்போது இந்தியா திரும்புவேன் என கூற முடியாது” மும்பை உயர் நீதிமன்றத்தில் விஜய் மல்லையா தகவல்



மும்பை, பிப்.20-

பிரிட்டனில் இருந்து வெளியேற அந்நாட்டு சட்டப்படி தடை விதிக்கப்பட்டுள்ளதால், எப்போது இந்தியா திரும்புவேன் என்று கூற முடியாது எனத் தொழிலதிபர் விஜய் மல்லையா மும்பை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வங்கிகளில் ரூ.9,000 கோடிக்கும் அதிகமான கடன் பெற்று மோசடி செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்காக அமலாக்கத் துறை எடுத்த நடவடிக்கையை எதிர்த்து மல்லையா தரப்பில் மும்பை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், இந்தியச் சட்டத் திட்டங்களுக்கு கட்டுப்பட்டு இந்தியா திரும்பினால் மட்டுமே உங்கள் மனு பரிசீலிக்கப்படும். எப்போது இந்தியா திரும்புவீர்கள் என்பது குறித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மல்லையா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அமித் தேசாய் கூறுகையில், “தொழிலதிபர் மல்லையாவின் இந்திய பாஸ்போர்ட் 2016ம் ஆண்டு இந்திய அரசால் ரத்து செய்யப்பட்டது. இதனால், அவரிடம் இப்போது இந்திய பாஸ்போர்ட் இல்லை.

மேலும், மல்லையா இங்கிலாந்து மற்றும் வேல்ஸை விட்டு வெளியேறவோ அல்லது வெளியேற முயற்சிக்கவோ அல்லது எந்தவொரு சர்வதேச பயண ஆவணத்திற்கும் விண்ணப்பிக்கவோ அல்லது வைத்திருக்கவோ அனுமதிக்கப்படவில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், மனுதாரர் எப்போது இந்தியா திரும்புவார் என்பதை துல்லியமாகக் கூற முடியாது” என்று நீதிமன்றத்தில் மல்லையாவின் அறிக்கையை தேசாய் வாசித்தார்.

இதையடுத்து, மல்லையாவின் அறிக்கை குறித்து மத்திய அரசு தனது பதிலை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை அடுத்த மாதம் ஒத்திவைத்தனர்




# சீன பொருட்களை காட்சிக்கு வைத்தது கேலிக்கூத்து: ஏஐ உச்சி மாநாடு பற்றி ராகுல் காந்தி விமர்சனம்

புதுடெல்லி, பிப்.20-

டெல்லியில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உச்சி மாநாடு நடைபெறுகிறது. இதில் ஒரு அரங்கம் நொய்டாவில் உள்ள கல்கோடியாஸ் என்ற தனியார் பல்கலைக் கழகத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் இருந்த பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி ஒருவர் ‘ஓரியான்’ என்ற ரோபோட்டிக் நாயை காட்சிக்கு வைத்திருந்தார்.

இது தங்கள் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு மையத்தில் உருவாக்கப்பட்டது என்று கூறி, அதன் சிறப்பு அம்சங்களை பார்வையாளர்களுக்கு விளக்கினார். ஆனால், உண்மையில் இது சீனாவின் யுனிட்ரீ என்ற நிறுவனத்தின் ஜீஒ2 என்ற ரோபோட்டிக் நாய். இது ஆன்லைனில் ரூ.2 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை விற்கப்படுகிறது.

இதற்கு ‘ஓரியான்’ என பெயர் வைத்து கல்கோடியாஸ் பல்கலைக்கழகம் தங்களின் சொந்த தயாரிப்பு என ஏஐ கண்காட்சியில் விளம்பரப்படுத்தியுள்ளது. இதை சீன ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

இதுகுறித்து எக்ஸ் தளத்தில் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, "ஏஐ உச்சி மாநாடு திட்டமிடப்படாத விளம்பர கேலிக்கூத்து. இங்கு இந்திய தரவுகள் விற்கப்படுகின்றன. சீன தயாரிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. உலக அரங்கில் இந்தியாவை கேலிக்கூத்தாக்கிவிட்டது மோடி அரசு" என கூறியுள்ளார்.

கல்கோடியாஸ் வெளியேற்றம்: இதுதொடர்பான வீடியோ வைரலானது. இதையடுத்து டெல்லி கண்காட்சி அரங்கை காலி செய்யும்படி கல்கோடியாஸ் பல்கலைக்கழகத்துக்கு உத்தரவிடப்பட்டது.

# அன்று அதிமுக... இன்று திமுக! இன்னொரு பிளவுக்குத் தயாராகிறதா தமிழக காங்கிரஸ்



சென்னை, பிப்.20-

தொண்டர்களின் கருத்துக்கு எதிராக முடிவெடுத்தால் என்ன நடக்கும் என்பதற்கு 1996லேயே தகுந்த பாடம் படித்திருக்கிறது டெல்லி காங்கிரஸ் தலைமை. தற்போது தெரிந்தோ தெரியாமலோ கட்சியை அத்தகைய நிலைக்கு தமிழக காங்கிரஸார் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாகவே காய்களை நகர்த்தி வருகிறது டெல்லி.

1996ல் அதிமுகவுக்கு எதிரான மனநிலை தமிழக மக்கள் மத்தியில் அலையடித்தது. அதைப் புரிந்து கொண்ட மூப்பனார், மூழ்கும் கப்பலில் பயணிக்க வேண்டாம் என்ற முன்னெச்சரிக்கையுடன் அதிமுக கூட்டணியை விட்டு வெளியேற வேண்டும் என காங்கிரஸ் தலைமைக்கு கோரிக்கை வைத்தார். ஆனால், அப்போதிருந்த காங்கிரஸ் தலைமை அவரது கோரிக்கையை ஏற்கவில்லை. அதனால், வேறு வழியின்றி தமிழக காங்கிரஸை உடைத்து தமிழ் மாநில காங்கிரஸை உருவாக்கினார் மூப்பனார்.

அந்தத் தேர்தலில் திமுக கூட்டணியில் ரஜினியின் ஆதரவோடு 40 தொகுதிகளில் போட்டியிட்ட தமாகா 39 இடங்களை வென்றது. அதிமுக கூட்டணியில் 60 இடங்களில் வேட்பாளர்களை நிறுத்திய காங்கிரஸால் ஒரு இடத்திலும் கரை சேரமுடியவில்லை. அப்போது நடந்த மக்களவைத் தேர்தலிலும் போட்டியிட்ட 20 தொகுதிகளையும் வென்று சாதித்தது தமாகா.

30 ஆண்டுகள் கழித்து மீண்டும் அதேபோன்ற இக்கட்டான சூழ்நிலை காங்கிரஸுக்கு வந்திருக்கிறது. தேர்தல் பேச்சு தொடங்குவதற்கு முன்னதாக சுமுகமாக இருந்த காங்கிரஸ் திமுக உறவு, இப்போது ஊசலாட்டத்தில் இருக்கிறது. அதிக தொகுதிகள், அதிகாரத்தில் பங்கு என மாணிக்கம் தாகூர் உள்ளிட்ட ஒருசிலர் கொளுத்திப் போட்ட நெருப்பு இப்போது ஒட்டுமொத்தமாகப் பற்றிக் கொண்டு எரிகிறது. வெற்றி தோல்வியைப் பற்றி கவலைப்படாமல் தவெகவுடன் கூட்டணி வைத்தால் தமிழகம் முழுவதும் எழுபது எண்பது தொகுதிகளில் கை சின்னம் களத்தில் நிற்கும். கட்சிக்கும் ஒரு மரியாதை கிடைக்கும் என்ற கருத்தை காங்கிரஸ் தொண்டர்களின் எண்ணங்களில் விதைத்துவிட்டார்கள்.

அதேசமயம், விஜய்யின் உண்மையான பலம் என்ன என்பது தெரியாத நிலையில், திமுக உடனான நெடிய அரசியல் பயணத்தை தொடர விரும்பும் முக்கிய தலைவர்கள் சிலர், திமுக கூட்டணி தொடர வேண்டும் என நினைக்கிறார்கள்.

அதனால் தான் தற்போது காங்கிரஸ் சிட்டிங் எம்எல்ஏக்களாக இருப்பவர்களின் தொகுதிகளில் திமுகவை கோபப்படுத்தும் விதமாக எந்தப் பிரளயமும் வெடிக்காமல் இருக்கிறது. ஆனால், கூட்டணிப் பேச்சுவார்த்தையில் காங்கிரஸின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக திமுக பிடிவாதம் காட்டினால், 1996ல் ஏற்பட்டது போல் இன்னொரு பிளவும் தமிழக காங்கிரஸில் நடக்கலாம். 1996ல் தொண்டர்களின் விருப்பத்துக்கு ஏற்ப அந்தப் பிளவு நடந்தது. ஆனால், இம்முறை அப்படியான ஒரு பிளவு ஏற்பட்டால் அது பதவிகளை தக்கவைக்கத் துடிக்கும் தலைவர்களால் ஏற்பட்டதாக இருக்கும். அப்போது நடந்த பிளவு இயல்பான ஒன்றாக இருந்தது. இப்போது ஒரு பிளவு ஏற்பட்டால் அதன் பின்னணியில் திமுகவும் இருக்கும்.

1996ல் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவு தேர்தலில் சாதனை படைத்து, ‘தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் தாங்கள் எடுத்த முடிவு தவறு’ என்று டெல்லி காங்கிரஸ் தலைமையை உணர வைத்தது. ஆனால், இப்போது அப்படியான பிளவு ஏற்பட்டால், தேர்தலுக்குப் பிறகு, ‘தலைமை எடுத்த முடிவு சரிதான்’ என பிரிந்து சென்றவர்களை உணரவைக்கும் என்கிறார்கள் தமிழக காங்கிரஸில் இருக்கும் விஜய் விரும்பிகள். அதேசமயம், விஜய்யுடன் தான் கூட்டணி என டெல்லி காங்கிரஸ் தலைமை முடிவெடுத்தால் தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து செல்வப்பெருந்தகை முதல் நபராகத் தூக்கப்படலாம். அந்த இடம் மாணிக்கம் தாகூருக்கோ அவரது விசுவாசிக்கோ ரிசர்வ் செய்யப்படலாம். என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

# விசாகப்பட்டினத்தில் சர்வதேச கடற்படை அணிவகுப்பில் பங்கேற்றார் குடியரசு தலைவர்



விசாகப்பட்டினம், பிப்.20-

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் நேற்று சர்வதேச கடற்படை அணிவகுப்பு நடைபெற்றது. இதில் இந்திய போர்க்கப்பல்கள் உட்படபல நாடுகளைச் சேர்ந்த 71 போர்க்கப்பல்கள் பங்கேற்றன. ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் சர்வதேச கடற்படை அணி வகுப்பு (ஐஎஃப்ஆர்) நேற்று பிரம்மாண்டமாக தொடங்கியது. இதில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். முதலில் அவர் கடற்படையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.அதன் பின்னர், இந்தியகடற்படை சார்பில்45 போர்க் கப்பல்கள், அமெரிக்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு நாடுகளின் 17 போர்க்கப்பல்கள் மற்றும் 7 வணிக மற்றும் எல்லை பாதுகாப்பு படை கப்பல்கள் என மொத்தம் 71 கப்பல்கள் 6 வரிசையில் அணிவகுப்பு நடத்தின.

இதன் பின்னர் இந்திய கடற்படைகப்பலில் குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு, ஆந்திர ஆளுநர் அப்துல் நசீர், முதல்வர்சந்திரபாபு நாயுடு,துணை முதல்வர் பவன்கல்யாண் ஆகியோர்சென்று சர்வதேச கடற்படையின் அணிவகுப்பை பார்வை யிட்டனர்.



■ பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆதரவோடு, கோவை வடக்கு மாவட்டம், அவிநாசி மேற்கு ஒன்றியம் சார்பில், வேலாயுதம்பாளையம் தெற்கு சக்தி கேந்திர பொறுப்பாளர் எஸ் ராஜசேகரன் தலைமையில், மங்களம் சாலை ராயன் கோவில் ஆர்ச் பகுதியில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. மேற்கு ஒன்றிய தலைவர் எம்.பிரபு ரத்தினம், சட்டமன்ற பொறுப்பாளர் கதிர்வேல், கோவை வடக்கு மாவட்டம் பிரச்சார பிரிவு இணை அமைப்பாளர் பிரபு மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பேரன்பாடிகள் கிளைத் தலைவர்கள், கிளைச் செயலாளர்கள், காவிச் சொந்தங்களும் அஇஅதிமுகவை சேர்ந்த அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் தம்பி ராஜேந்திரன், சார்ந்த நிர்வாகிகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

# 100 நாள் வேலைத் திட்டம் வழக்கு: சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணை தள்ளிவைப்பு



சென்னை, பிப்.20-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டுவரப்பட்டுள்ள 'விக்சித் பாரத் ஜி ராம் ஜி' சட்டப் பிரிவுகளை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணையை சென்னை உயர் நீதிமன்றம் அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்துள்ளது.

இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் சிவஞானசம்பந்தன் தாக்கல் செய்திருந்த மனுவில், "கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கடந்த 2005 ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள், ஏழை, எளியோருக்கு 100 நாட்களுக்கு வேலை உத்தரவாதம் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் மத்திய அரசு திடீரென இந்த சட்டத்தை மாற்றியமைத்து, 'விக்சித் பாரத் ஜி ராம் ஜி' என பெயர் மாற்றம் செய்துள்ளது.

ஏற்கெனவே இருந்த திட்டத்தில் மத்திய அரசு 90 சதவீத நிதியையும், மாநில அரசு 10 சதவீத நிதியையும் பங்களிப்பாக வழங்கி வந்தன. ஆனால் புதிய சட்டப்படி வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தைத் தவிர மற்ற மாநிலங்கள் 40 சதவீத நிதியை பங்களிப்பு நிதியாக வழங்க வேண்டும். மேலும், புதிய சட்டத்தில் கிராம பஞ்சாயத்துகள் மற்றும் கிராம சபைக் கூட்டங்களுக்கான அதிகாரமும் பறிக்கப்பட்டுள்ளது. எங்கு பணி செய்ய வேண்டுமென்பதை மத்திய அரசுதான் அறிவிக்கும் என்பதால் கிராமப்புற மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

எனவே இந்த புதிய சட்டத்தில் உள்ள 8 பிரிவுகள் அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமாக இருப்பதால் அவற்றை செல்லாது என அறிவித்து ரத்து செய்து உத்தரவிட வேண்டும்" எனக் கோரி யிருந்தார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கில் கூடுதல் தகவல்களைச் சமர்ப்பிக்க அவகாசம் வழங்க வேண்டுமென மனுதாரர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதையேற்ற நீதிபதிகள், இந்த வழக்கு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்துள்ளனர்.

# 7 வயது சிறுமி கொலை வழக்கில் திருப்பம்: கொலையாளி தற்கொலை திருப்பதி அருகே நடந்தது என்ன




திருப்பதி, பிப்.20-

திருப்பதி அருகே உள்ள மதனபல்லியை சேர்ந்த 7 வயது சிறுமி, கடந்த 16ம் தேதி காணாமல் போனார். இதையடுத்து அவரது பெற்றோர் பல இடங்களில் தேடிய பின்னர் போலீஸில் புகார் கொடுத்தனர்.

மதனபல்லி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். வீட்டின் அருகே இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவானவற்றை கொண்டு ஆய்வு செய்த போது சிறுமியின் பக்கத்து வீட்டில் வசிக்கும் குலவர்தன் என்பவர், சிறுமியை அழைத்துச் சென்றது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து குலவர்தன் வீட்டில் ஆய்வு செய்த போது சிறுமியின் சடலம் கிடைத்தது. இதையடுத்து குலவர்தன் கைதானார்.

இந்நிலையில் குலவர்தனை தங்களிடம் ஒப்படைக்குமாறு பொதுமக்கள் கோஷமிட்டனர். ஆந்திர அமைச்சர்கள் அனிதா, லோகேஷ் ஆகியோர் தலையிட்டு, குற்றவாளிக்கு தண்டனை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என உறுதி அளித்தனர். அதன் பின்னர், குலவர்தனை போலீஸார் அழைத்துச் சென்றனர். பின்னர் சிறுமியின் உடல் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று கனசானிவாரிபல்லி ஏரியில் குலவர்தன் ஏரியில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். தகவல் அறிந்த மதனபல்லி மக்கள் ஊர்வலமாக சென்று, பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

# முதல்வர் ஸ்டாலினை சந்திக்க முடியவில்லை: ஏமாற்றத்துடன் திரும்பிய கே.சி.வேணுகோபால்



சென்னை, பிப்.20-

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னை வந்திருந்த அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், முதல்வர் ஸ்டாலினை சந்திக்க முடியாததால் மிகுந்த ஏமாற்றத்துடன் டெல்லி திரும்பியிருப்பதாக கூறப்படுகிறது. இதுகுறித்து சத்தியமூர்த்தி பவன் சீனியர்கள் கூறுகையில், "தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நடைபெற்ற காங்கிரஸ் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கே.சி. வேணுகோபால் வந்திருந்தார். திட்டமிட்டபடி தனது நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் இரவே அவர் டெல்லி திரும்புவதாக இருந்தது. இதற்கிடையில், கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்தும் விதமாக மாணிக்கம் தாகூர் மற்றும் பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் தொடர்ந்து பேசி வந்தது, திமுக மேலிடத்தைக் கடும் கோபமடையச் செய்திருந்தது. இந்தச் சூழலில், முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்துப் பேசி நிலைமையைச் சீர்செய்ய வேணுகோபால் முடிவு செய்தார். இதற்காகவே சென்னை விமான நிலையம் அருகிலுள்ள ஓட்டலில் தங்கிய அவர், நேற்று காலை முதல்வரைச் சந்திக்க நேரம் கேட்டார். ஆனால், சட்டப்பேரவைக் கூட்டத் தொடரைக் காரணம் காட்டி திமுக தரப்பில் நேரம் ஒதுக்கப்படவில்லை. இதனால் மதியமே அவர் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்" என்றனர்.

தொடர்ந்து பேசிய அறிவாலயப் புள்ளிகள், "மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் கூட்டணிக்கு விரோதமாகத் தொடர்ந்து சர்ச்சை கருத்துகளைப் பேசி வந்தனர். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாங்கள் காங்கிரஸ் தலைமைக்குக் கோரிக்கை விடுத்தோம். ஆனால், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சென்னை வந்த கே.சி. வேணுகோபாலோ, 'ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பதெல்லாம் அவரவர் சொந்தக் கருத்து' எனப் பேட்டியளித்துவிட்டுச் செல்கிறார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இதன் மூலம் சர்ச்சைக்குரிய அந்தப் பேச்சுகளுக்குப் பின்னால் ராகுல் காந்தி, கார்கே அல்லது வேணுகோபால் ஆகியோரின் தொடர்பு இருக்குமோ என்கிற சந்தேகம் எங்களுக்கு எழுந்துள்ளது. எனவே, எங்கள் தலைவர் ஸ்டாலின் நேரடியாக சோனியா காந்தியிடமே இது குறித்துப் பேசிக்கொள்ளலாம் என முடிவு செய்துவிட்டார். அதன்படியே பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால்தான் வேணுகோபாலைச் சந்திக்க முதல்வர் விரும்பவில்லை" என்றனர்.

# தமிழகத்தில் போக்சோ குற்றங்கள் 125.5% அதிகரிப்பு: பாஜக குற்றச்சாட்டு




சென்னை, பிப்.20-

தமிழகத்தில் போக்சோ குற்றங்கள் 125.5 சதவீதம் அதிகரித்திருப்பதாக பாஜக குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து மாநில பாஜகவின் அதிகாரபூர்வ எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிடப்பட்ட பதிவு: தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துவிட்டன என்று சட்டப்பேரவையில், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதற்கு, 'மணிப்பூரைப் பார், மத்திய அரசின் தரவைப் பார்' என்று வாய்ச்சவடால் விட்ட முதல்வர் ஸ்டாலின், முதலில் தனது அரசின் காவல் துறை வெளியிட்ட கொள்கை விளக்கக் குறிப்பை உற்றுப் பார்க்க வேண்டும். கடந்த 2020ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தங்களது தலைமையிலான திமுக அரசு பொறுப்பேற்ற பின்தான், கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 59.7 சதவீதமாக உயர்ந்து, பெண்கள் நடமாட்டத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது. அதுமட்டுமன்றி, குழந்தைகளுக்கு எதிரான போக்சோ குற்றங்களும் 125.5 சதவீதமாக அதிகரித்து பச்சிளம் குழந்தைகளின் பாதுகாப்பையும் காவு வாங்கியுள்ளது.

இந்த லட்சணத்தில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் என மேடையில் நாடகமாடுவது, இந்தியாவிலேயே பாதுகாப்பான மாநிலம் என சட்டப்பேரவையில் மார்தட்டுவது வேண்டாம். தமிழகப் பெண்களின் பாதுகாப்பு குறித்து கடுகளவும் அக்கறையின்றி திசை திருப்புவதில் மட்டுமே குறியாக இருக்கும் உங்களது போலி முகத்திரை வரும் தேர்தலில் கிழித்தெறியப்படும். தமிழகப் பெண்களின் வாழ்வு காக்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் செயல் குழு கூட்டம்



திண்டுக்கல், பிப்.20-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் திண்டுக்கல மாவட்டத் தலைவர் பார்த்தசாரதி, தலைமையில் வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட செயல் குழு கூட்டம் நடைபெற உள்ளது. தானத்தலைவர் சிவா இளங்கோ அரங்கம் திண்டுக்கல் இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஒன்றிய வட்டக்கிளை காலியாளர்கள் உள்ளபதவிகளை நிரப்புக 2026 ஆம் ஆண்டுக்கான திருடப்படுத்துதல் மாவட்ட ஒன்றியத்தில்எதிர்காலம் குறித்த விவாதித்தல் மற்றும் பல்வேறு ஆலோசனைகள்வழங்க உள்ளதால் நிர்வாகிகள் அனைவரும் இதில் கலந்து கொள்ள திண்டுக்கல் மாவட்ட தலைவர் பார்த்தசாரதி அறிக்கை வெளியிட்டுள்ளார்..

# தமிழக மீனவர்கள் 22 பேரை கைது செய்தது இலங்கை கடற்படை



ராமேசுவரம், பிப்.20-

தமிழக மீனவர்களின் 4 விசைப் படகுகளை தனித்தனியாக சிறைப் பிடித்து ராமேசுவரம் மற்றும் மண்டபத்தைச் சேர்ந்த 22 மீனவர்களை இலங்கை கடற்படை படையினர் சிறைப்பிடித்தனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2500க்கும் மேற்பட்ட மீனவர்கள் புதன்கிழமை கடலுக்குச் சென்றனர். இதில் அலேக்ஸ்டேனியல், அந்தோணி கிருமிராஜ் ஆகியோரின் 2 விசைப் படகுகள் நெடுந்தீவு அருகே புதன்கிழமை இரவு இலங்கை கடற்படை யினர் சிறைப்பிடித்தனர்.

இரண்டு படகுகளிலிருந்த விமல்ராஜ், தபோன் ராஜா, பாக்கியராஜ், தீபக், ஆரோக்கிய பிரச்சிஸ், இம்மானுவேல், சந்தியா ஸ்டுவர்ட், பாக்லின், அந்தோணி குணால், காளிதாஸ், சந்தியா ஆல்டன், வின்சர் ஆகிய 12 மீனவர்ளை காங்கேசன் துறை கடற்படை முகாமுக்கு இலங்கை கடற்படையினர் கொண்டு சென்றனர்.

இந்த 12 மீனவர்கள் மீதும், எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஊர்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலில் மார்ச் 4 வரையிலும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், ராமேசுவரத்திலிருந்து கடலுக்குச் சென்ற வெங்கடேசன் என்பவர் விசைப்படகிலிருந்து புவனேஷ் நம்பு, முருகராஜ், ஜூட் , ராமக்கிருஷ்ணன், அருள்தாஸ், பழனிச்சாமி ஆகிய 6 மீனவர்களும், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற மலைராஜன் என்பவரது விசைப்படகை கைப்பற்றி, படகிலிருந்த ராமசாமி, நாகூர் கண்ணன், பாலசுப்பிரமணியன், ராஜமணி ஆகிய 4 மீனவர்கள் என 10 மீனவர்களை இலங்கை கடற்படை யினர் தலைமன்னார் கடற்பகுதியில் சிறைப்பிடித்து, தலைமன்னார் கடற்படை முகாமுக்கு கொண்டு சென்றனர். இந்த 10 மீனவர்களும் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

மீனவர் சங்கம் கண்டனம்:

கச்சத்தீவு திருவிழா நடைபெற உள்ள நிலையில் தமிழக மீனவர்கள் 22 பேர் கைது செய்திருப்பது கண்டனத்திற்குரியது என ஏஐடியுசி மீனவர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏஐடியுசி மீனவர் சங்கத்தின் அகில இந்திய துணை தலைவர் செந்தில்வேல் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ராமேசுவரம் மற்றும் மண்டபம் பகுதிகளில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 22 மீனவர்களை, கச்சத்தீவு மற்றும் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் அத்துமீறிச் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர்.

மேலும், மீனவர்களின் வாழ்வாதாரமான 4 விசைப் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். பிப்ரவரி 27, 28 ஆகிய தேதிகளில் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா நடைபெற உள்ள நிலையில், இந்த கைது நடவடிக்கை மீனவக் கிராமங்களில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் வகையில், இலங்கை கடற்படையினரின் அராஜகப்போக்கு மீண்டும் அரங்கேறியுள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்துவதும், கைது செய்வதும் வாடிக்கையாகிவிட்டது.

இது இந்திய இறையாண்மைக்கு விடப்படும் சவாலாகும். வெளியுறவுத் துறை அமைச்சகம் உடனடியாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கைது செய்யப்பட்ட 22 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கச்சத்தீவு மீட்பு மற்றும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை உறுதி செய்ய மத்திய அரசு நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 141 ஆண்டுகளாகத் தொடரும் அனைத்து சமுதாய மக்களும் வழிபாடு செய்யும் காமன்கோவில் விழா

சின்னாளபட்டி, பிப்.20-

சின்னாளபட்டி கடைவீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முனியப்ப சுவாமி கோயிலின் உப கோயிலான ஸ்ரீ காமயசுவாமி கோயிலில், ஆண்டுதோறும் காமன் திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு விழாவை முன்னிட்டு, பூசாரி எம்.பால்பாண்டி காமய சுவாமியைச் சுமந்து வர, ஊர்வலம் சின்னாளபட்டி பிரிவு, பூஞ்சோலை மற்றும் பேருந்து நிலையம் வழியாகக் கோயிலைச் சென்றடைந்தது.

விழா ஏற்பாடுகளை தலைவர் சிவமுருகேசன், செயலாளர் கிருஷ்ணவேல்ராஜா, பொருளாளர் சுப்பையா, உதவி தலைவர்கள் மார்க்கம்பட்டி முருகன், பி.ராகவன், உதவி செயலாளர்கள் ஆர்.தியாகராஜன், எம்.பிரசன்னா, ஏ.அழகேசன், ஜெ.ராம்குமார், எஸ்.வினோத்சாரதி, தலைமையிலான விழாக் கமிட்டியாளர்கள் விழாவை சிறப்பாக செய்திருந்தனர்.



■ தென்காசி மாவட்டம் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கலிங்கப்பட்டி, சத்திரப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் ஊரகவளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# திருப்பூரில் மண்டல அளவிலான மகளிர் சுய உதவிக்குழு பொருட்களின் வணிக சந்திப்பு: கலெக்டர் தகவல்

திருப்பூர், பிப். 20-

திருப்பூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக, மகளிர் சுய உதவிக்குழுவினரின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான மண்டல அளவிலான வணிக சந்திப்பு வரும் பிப்ரவரி 23ஆம் தேதி (திங்கட்கிழமை) நடைபெற உள்ளது.



இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருப்பூர் அவினாசி சாலை, திருமுருகன்பூண்டி அருகிலுள்ள 'பாப்பீஸ் விஸ்டா' (Poppys Vista) ஹோட்டல் வளாகத்தில் இந்த வணிக சந்திப்பு நடைபெறுகிறது. இதில் திருப்பூர், கோவை, ஈரோடு, திண்டுக்கல், நீலகிரி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக்குழுவினரின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.*பதிவு செய்ய அழைப்பு:* இந்தச் சந்திப்பில் வணிகர் சங்கங்கள், ஏற்றுமதியாளர்கள், ஹோட்டல் நிறுவனங்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் கலந்து கொண்டு பொருட்களைக் கொள்முதல் செய்யலாம். இதில் பங்கேற்க விரும்புவோர் பிப். 21க்குள் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வாழ்வாதார இயக்க மேலாண்மை அலகு (அறை எண்: 305)ல் பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.



# இயற்கை விவசாயிகள் மற்றும் நாட்டுமாடுகள் வளர்ப்போர் கூட்டமைப்பின் ஜல்லிக்கட்டு: 847 காளைகள் துள்ளிக்குதித்தன

அலங்காநல்லூர் பிப் .20-

மதுரை அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் ஏறு தழுவுதல் அரங்கில் இயற்கை விவசாயிகள் மற்றும் நாட்டுமாடுகள் வளர்ப்போர் கூட்டமைப்பின் சார்பில் ஜல்லிக்கட்டு போட்டியினை வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன், தொழிலதிபர் நல்லமணிகாந்தி, ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஜெய்கணேஷ், சென்னை தொழிலதிபர் சக்திவேல் தலைமையில் 300க்கும் மேற்பட்டோர் இந்த ஜல்லிக்கட்டு போட்டியினை கண்டு ரசித்தனர்.

இந்த போட்டியில் 847காளைகளும் 372 வீரர்களும் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் ஒன்றின் பின் ஒன்றாக அவிழ்த்திடப்பட்டு ஜல்லிக்கட்டு காளை நின்று விளையாடி பரிசுகளை பெற்றது. விழா கமிட்டியினர் அனைத்து காளைகளுக்கும் பரிசு டோக்கன்களை வழங்கினர்.

ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டது.வட்டார மருத்துவர் வளர்மதி தலைமையிலான மருத்துவ குழுவினர் தலைமையில் மருத்துவ பணியாளர்கள் காயம்பட்ட வீரர்களுக்கு சிகிச்சை அளித்தனர். வருவாய்த்துறை தீயணைப்பு துறை வீரர்கள் இதில் கலந்து கொண்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை சமயநல்லூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஆனந்தராஜ் தலைமையிலான போலீசார் செய்து இருந்தனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# 2026ல் வரலாற்றுச் சாதனை படைக்க மகளிர் அயராது உழைக்க வேண்டும் வழக்கறிஞர் காமாட்சி பேச்சு

திண்டுக்கல், பிப்.20-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கான "வெல்லும் தமிழ் பெண்கள்" ஆலோசனைக் கூட்டம் என்.பஞ்சம்பட்டி அருகே உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் மார்க்கிரேட் மேரி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



"தமிழக முதல்வர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். ஒரு நாடு வளம் பெற பெண்கள் முன்னேற வேண்டும் என்பதை முதல்வர் உறுதியாக நம்புகிறார். எனவே, 'வெல்லும் தமிழ் பெண்கள்' என்ற அமைப்பின் மூலம் வார்டு வாரியாகவும், வீடு வீடாகவும் சென்று அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளரும், வெல்லும் தமிழ் பெண்கள் தொகுதி ஒருங்கிணைப்பாளருமான மார்க்கிரேட் மேரி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, நெடுஞ்செழியன், இன்பராஜ், மணி, ராஜேந்திரன், பாறைப்பட்;டி இராமன், ஒன்றிய அவைத்தலைவர் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பாப்பாத்தி, பேரூர் கழக செயலாளர்கள் ஜெயபால், இளங்கோவன், தாங்கராஜ், இராமலிங்கம், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



# தி.நா.புதுக்குடி தேர்தல் அறிக்கைகளை விளக்கி அதிமுக தெருமுனை பிரச்சாரக் கூட்டம்

புளியங்குடி, பிப். 20-

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி தி.நா புதுக்குடி பேருந்து நிறுத்தம் அருகே அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி ஆணைக்கிணங்க, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி (எ) குட்டியப்பா வழிகாட்டுதலின்படி, அதிமுக தேர்தல் அறிக்கைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

புளியங்குடி நகரக் கழகச் செயலாளர், முன்னாள் நகர மன்ற தலைவர் சங்கர பாண்டியன் வரவேற்புரையாற்றினார். முன்னாள் அமைச்சர், மகளிர் அணி துணைச் செயலாளர் வி.எம். ராஜலட்சுமி, அதிமுக தலைமைக் கழக பேச்சாளர் பேராசிரியர் கல்யாண சுந்தரம் ஆகியோர் பொதுமக்களிடம் விளக்கிப் பேசினார்கள். கூட்டத்தில் திருநெல்வேலி மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சிவ ஆனந்த், மாவட்ட கழக அவைத் தலைவர் வி.பி மூர்த்தி, துணைச் செயலாளர் பொய்கை மாரியப்பன், பொருளாளர் சண்முகையா, மாவட்ட மகளிர் அணி செயலாளர் டாக்டர் சத்ய கலா தீபக், அண்ணா தொழிற்சங்க போக்குவரத்து பிரிவு மண்டல பொருளாளர் ஆத்மநாதன், வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பொன் முத்துவேல்சாமி, புளியங்குடி நகரக் கழகச் துணை செயலாளர் கதிரவன், நகர எம்ஜிஆர் மன்ற செயலாளர் சாகுல் ஹமீது, புளியங்குடி நகர முன்னாள் பொருளாளர் மாரியப்பன், கோபி என்ற கிருஷ்ணசாமி, செல்வ சந்திரசேகரன், கருப்பையா, சௌகத் அலி, கணேஷ் குமார், சுந்தர்ராஜ், வார்டு செயலாளர்கள் சீனித்துரை, தங்கதுரை, சக்திவேல், வீரமணி, கோட்டூர் சாமி, மணி, ஆவுடையப்பன், குருவையா , மாரியப்பன், செல்வகுமார், சேகர், முருகன், சரவணகுமார், அய்யாக்கண்ணு, பாலசுப்ரமணியன், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை துணைத் தலைவர் கண்ணன், குமார், சபரி, கனகராஜ் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் 'லிட்ரோ மார்க் 2026' இலக்கியத் திருவிழா

திசையன்விளை, பிப்.20-

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரி திசையன்விளை ஆங்கிலத் துறையின் இலக்கியப் பேரவை துவக்க விழா Litero-Mark 2026, கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் டாக்டர் லில்லி நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, பேரவையைத் தொடங்கி வைத்தார். ஆங்கிலத் துறைத் தலைவர் டாக்டர் K. தமிழ்ச்செல்வி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர் D.ஆண்டனி குழந்தை ஜோரன்ஸ் ஆங்கிலத்துறை மாணவர் பேரவை செயலாளராகவும், இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவி பிரசன்னா ஆங்கிலத்துறை மாணவர் பேரவை துணைச் செயலாளராகவும் பதவி அமர்த்தபட்டார்கள். மாணவர் பேரவை செயலாளர் D.குழந்தை ஜோரன்ஸ் அனைவரையும் வரவேற்று பேசினார். துணைச் செயலாளர் S.பிரசன்னா நன்றியுரை வழங்கினார்.

|கூட்ட முடிவில் ஆங்கிலத் துறையின் சார்பில் நடைபெற்ற Litero-2026 ஆங்கில இலக்கிய கண்காட்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் பரிசுகளை வழங்கினார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் முனைவர் R.சுபாஷ் கருத்துடையான், யி.மரியா ஆஷா , சி. பட்டு சூர்யா மற்றும் றி மகேஷ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ திண்டுக்கல் காட்டாஸ்பத்திரி பகுதியில் ஆக்கிரமிப்பில் இயங்கி வந்த அரசு அலுவலர் உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்க கட்டிடம் இடித்து அகற்றம்.



■ சேலம் மாவட்டம் கட்சிபாளையம் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோவிலில், மாசி மகத் திருவிழாவை முன்னிட்டு, மயான கொள்ளை நிகழ்ச்சி பால் தெளித்தல் பூஜையுடன் மிகச்சிறப்பாக நிறைவடைந்தது. பூஜையின் ஒரு பகுதியாக, அம்மனுக்குப் படைக்கப்பட்ட பிரசாதத்தில் குழந்தை உருவம் செய்யப்பட்டு, அதற்குப் பால் ஊற்றிப் பக்குவப்படுத்தப்பட்டது. பின் இந்த விசேஷ பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இது குழந்தை வரம் வேண்டி வரும் பக்தர்களிடையே மிகுந்த நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
HALL MARK
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
GOLD 916 SIVER 92.5
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

தினமும் தேனீரும்
மாரி டீ கடை
மாரி ஹோட்டல்
1590s
இந்தியர்கள் தேயிலையை பூண்டுடன் சேர்த்து உணவாகவும், தேனீராகவும் பருகுவதை டச்சு பயணி JAN HUGHEN VAN LINSCHOTEN குறிப்பிட்டுள்ளார்!
1820s
அசாம் மாநிலத்தில் சிங்போ பழங்குடியின மக்கள் பாரம்பரிய முறையில் தயாரித்து வந்த தேனீரை பிரிட்டன் கிழக்கு இந்திய நிறுவனம் அதிகளவில் தயாரிக்க தொடங்கியது!
1826
கிழக்கு இந்திய நிறுவனம் அஹோம் மன்னர்களிடமிருந்து தேயிலை தோட்டங்களை யந்தபூ ஒப்பந்தத்தின் மூலம் கைப்பற்றியது!
1837
ஆங்கிலேயர் காலத்தில் முதல் தேனீர் தோட்டம் அசாம் மாநிலம் சப்புவா பகுதியில் தொடங்கப்பட்டது!
1840
தேயிலையின் வணிக ரீதியான தயாரிப்பை அசாம் டீ நிறுவனம் தொடங்கியது!
1850
தேயிலை தோட்டங்கள் குறுகிய காலத்தில் பரந்து விரிய தொடங்கின!
ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
Everything IS BETTER WITH Tea

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000